# 5B செயல்முறைப்பகுதி

## 1. பொஸேனா அலெபிக்: தனிநிலைப்பாடு கோட்பாட்டினைக் கையாளுவதில் என் பட்டறிவு

பொஸேனா அலெபிக் குறோசியாவை (பிரிவடைந்த) சேர்ந்தவள். அவர் குறோசியன் பா.மொ.க ஆசிரியராக சூரிச்சில் 2004 – 2008 மற்றும் 2010 – 2014 வரை பணிசெய்தார்.

குறோசியனை வெளிநாட்டில் கற்பிக்கின்ற பொழுது, தனிநிலைப்பாடு கோட்பாட்டினை நடைமுறைப்படுத்துவது தவிர்க்கமுடியாததாகும், ஏனெனில் அங்குள்ள பிள்ளைகள் வழமையான வகுப்பறைக் கற்பித்தலுக்குப் பழக்கப்பட்டுள்ளார்கள். இக்காரணத்தால், நான் எப்போதும் மிகச் சுருங்கிய கால அளவில் ஒவ்வொரு பிள்ளையைப் பற்றியும் அவர்களுடைய மொழித் தகைமைகள், முன்னைய அறிவு, இயலுமைகள், கடுமைகள் ஆகியனவற்றை மதிப்பிடுவதற்கு அறிந்துகொள்ள முயற்சிக்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில், கருப்பொருளைத் தேர்வு செய்து திட்டமிடும்பொழுதே தனிநிலைப்பாட்டுச் செயற்பாடு தொடங்கிவிடுகிறது. வேறுபட்ட அகவை மற்றும் கடின தரநிலைகளில் பயன்படுத்தக்கூடிய தலைப்பினை நான் தேடுகிறேன். பெரும்பாலான நேரத்தில், நான் ஒரு பொதுக் கட்டத்தில் தொடங்குவேன், அவ்வேளையில் தலைப்புக்கான வேண்டுகைகளும் அடிப்படைக் குறோசியன் துறைசார் சொற்களும் விளக்கப்படுகின்றன. வழக்கமாக ஏற்கனவே தெரிந்த மற்றும் நிறுவப்பட்ட எண்ணக்கருக்கள் இருக்கின்றன, எனினும் புதிய கருத்துகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இதைத் தொடர்ந்து தனிநிலைப்பட்ட ஒப்படை, அது தனியாகவோ ஒரு கூட்டாளியுடனோ செயற்படத்தமுடியும். இதற்காக, வெவ்வேறு தரநிலை எதிர்பார்ப்புக்கேற்ப, வெவ்வேறு பதிப்புகளுடைய பணித்தாளை நான் உருவாக்குகிறேன். ஒவ்வொரு பதிப்பும் எளிமையான பணிகளுடன் தொடங்கி படிப்படியாகக் கடுமையாக்கப்பட்டு முடிவில் மிகச் சிக்கலான ஒப்படைகளுக்குச் செல்வதை நான் உறுதிப்படுத்திக் கொள்கிறேன். இந்த வழியில், முதல் (எளிமையான) ஒப்படைகளைக் கையகப்படுத்தும் குறைநிலை மாணவர்கள் கூட வெற்றி உணர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும். எல்லாக் கணிப்பீடுகளிலும் தேர்வுகளிலும் கூட படிப்படியான கூட்டுதல்களையே நான் தொடர்ந்து செயலாக்குகிறேன். எடுத்துக்காட்டாக, இது குறைநிலை மாணவர்களை குறைந்தது முதல் ஐந்து வினாக்களுக்காவது விடையளிக்கவும், நடுநிலை மாணவர்கள் முதல் பத்தினை முடிக்கவும், வலுவுள்ள மாணவர்கள் எல்லா 15 வினாக்களையும் முடிக்க இசைவளிக்கிறது. இந்த நடைமுறையின் பெரு இலக்கு என்னவெனில், ஒவ்வொரு பணிநூலும் மாணவர்களின் வேண்டுகைகளுக்கும் இயலுமைகளுக்கும் உகந்ததாக வடிவமைக்கப்படுவதாகும். தான் இக் கொள்கையை பல வழிமுறைகளால் அவதானிக்கின்றேன். முதலாவதாக மாணவர்களுக்கு வாய்மொழி மூலமாக சோதனை வைப்பேன் பின்னர் விளங்கப்படுத்தப்பட்ட விடயங்கள் விளங்கியுள்ளதா என கண்டறிவேன் பல விதமான மாணவர்களை தனிமையில் கரிசனையாக கவனிப்பேன் வகுப்பில் அது தொடர்பாக உரையாடுவேன்.

தனிநிலைப்பாடு கோட்பாட்டினை மொழிப் பயிற்சி மற்றும் வாய்வழிப் பணிகளுடன் கண்காணித்தேன். முதலில், வழங்கப்பட்ட உள்ளடக்கத்தினை எல்லா மாணவர்களும் விளங்கிக்கொண்டனரா என்பதை நான் உறுதிசெய்து கொள்கிறேன். அடிக்கடி நான் ஒரே ஒப்படையை வெவ்வேறு வழிகளில் விளங்கப்படுத்துவேன். சிலவேளைகளில் குறைநிலை மாணவர்களுக்குத் தனித்தனியாகவும் விளங்கப்படுத்துவேன். பிள்ளைகளின் பட்டறிவு உலகினை முடிந்த அளவு மிக நெருக்கமாக அணுகுதற்கு ஏற்ற வகையில் நான் ஒப்படைகளின் உள்ளடக்கத்தையும் வகுப்புக் கலந்துரையாடல்களின் கருப்பொருள்களையும் அமைத்திருக்கிறேன். அவர்களுக்கு ஆர்வமுடைய மற்றும் அவர்களுடைய முன்னைய அறிவையும் பட்டறிவுகளையும் தொட்டுச்செல்லக் கூடிய தலைப்புகளையும் ஒப்படைகளையும் தெரிவுசெய்ய முயற்சிக்கிறேன். பல்வகைப்பட்ட வகுப்புகள் அகவை, பால்நிலை, குறோசியன் தகைமை, ஆர்வங்கள் என்னும் அடிப்படையில் பெரிதும் வேறுபடுவதால், வகுப்பு முழுவதையுமன்றி, பல தலைப்புகளை மாணவர்கள் சிறு குழுக்களாகக் கலந்துரையாட வைக்கிறேன். முடிவில், ஒவ்வொரு குழுவும் தங்களுடைய உரையாடல் மற்றும் கண்டுபிடிப்புகள் பற்றி ஒரு சிறு அறிக்கையை அளிக்கும்.

குறோசியன் குடியரசின் வழமையான வகுப்புகளுடன் ஒப்பிடும்போது பா.மொ.க வகுப்புகளின் பெரும் பல்வகைத் தன்மை வல்லமை மிக்க சவாலாகும். அடிக்கடி ஒரே குழுவில், மழலையர் தொடக்கம் எட்டாம் வகுப்பு வரையான மாணவர்கள் இருப்பார்கள். ஒருமுகப்படுத்தலை ஒரு எளிமையான விளையாட்டாக அமைத்தபோதிலும், இத்தகைய குழுவில் ஒரு பொதுப்பணி ஊக்குவிப்பினைக் கண்டுபிடித்தல் மிகவும் கடினமாகும்.

தனிநிலைப்பாடு தவிர, ஏனைய ஆசிரியக்கலைக் கோட்பாடுகளும் என்னுடைய வகுப்பறையின் உள்ளார்ந்த பகுதியாக அமைகின்றன, மிக இன்றியமையாதன, சுதந்திரமான நிலைக் கோட்பாடுகள், விளையாட்டுக் கற்கை, ஆக்கத்திறன். "விளையாட்டு" என்னும் சொல்லே கூட மாணவர்களில் ஊக்குவிப்பு விளைவினை ஏற்படுத்துமென்பதால், முடிந்த அளவிலெல்லாம் நான் ஆக்கக் கற்கை மற்றும் ஆக்கத்திறன் கோட்பாடுகளைப் பயன்படுத்துகிறேன். இச்சூழலில் மொழி விளையாட்டுகள், ஒருமுகப்படுத்தல் விளையாட்டுகள், நினைவு விளையாட்டுகள், முதலியன, எல்லாமே மிக நல்ல கற்றல் பட்டறிவினை வழங்குகிறது. இந்தப் பாங்கில் ஒருவர் வகுப்பறைக் கற்பித்தலை ஒழுங்கமைக்கும்போது மிகப் பெரிய ஆக்கத்திறனும் ஈடுபட்டுக்கொள்ளலும் வேண்டப்படுகின்றன. எப்படியாயினும், மாணவர்களின் மகிழ்ச்சியும் மறுமொழியும், இது மிக மதிப்புள்ள முயற்சி என்பதைக் காட்டுகின்றன.

## 2. ஸலிஹா ஸலிஹ் அல்கொன் தனிநிலைப்பாடாக்குதல் மற்றும் சுதந்திரமான நிலையை முன்னேற்றல், காரணங்கள் மற்றும் ஓர் எடுத்துக்காட்டு

ஸலிஹா ஸலிஹ் அல்கொன் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர். அவர் வியென்னாவில் ஒன்பது ஆண்டுகள் வாழ்ந்து, இரண்டு ஆண்டுகளாக அரபிக் மற்றும் ஸ்பனிஷ் தன்மொழி ஆசிரியராக பணியாற்றினார்.

எனது அரபு மொழி வகுப்புகளில், மொழியியல் தகைமைகள் மற்றும் வேண்டுகைகள் என்பவற்றில் மிக வேறுபட்ட தரங்களையுடைய மாணவர்கள் உள்ளார்கள்.

பொதுவாக தந்தை மாத்திரம் அரபிக் மொழி பேசுகின்ற கலப்புத் திருமணங்களின் குடும்பதிலிருந்து வந்த பிள்ளைகளாவார்கள். இவ்வாறான மாணவர்களினால் அரிதாகவே அரபிக் மொழியை பேசவும் விளங்கிக் கொள்ளவும் முடிகின்றது. அவர்களுக்கு பெருமளவு நேரங்களில பா.மொ.க வகுப்புக்கள் நடைபெறுகின்றன, அரபிக் மொழியை "சரியாக" கற்பதற்கு இது மட்டுமே வாய்ப்பாயுள்ளது.

இதற்கு மேலாக, என் வகுப்புகளில் உள்ள பிள்ளைகளின் பெற்றோர்கள் இருவரும் அரபியர்கள். அவர்கள் பல்வேறுபட்ட அரேபிய நாடுகளிலிருந்து வந்தமையினால் பல்வேறுபட்ட பேச்சு வழக்குகளைப் பயன்படுத்துகின்றனர். மேலும் உயர் மற்றும் புதிய தராதர அரபிக் மொழியை பேசுவதிலும் விளங்கிக் கொள்வதிலும் அவர்களுக்குச் சிக்கல்கள் உள்ளன.

எனது மாணவர்களில் பலரால் எழுத முடியும், ஆனால் படிக்கவோ உள்வாங்கவோ முடியவில்லை, மற்றவர்கள் உடனடியாக முன்னேற்றம் காணப்படவேண்டிய ஒலிப்பினை உடையவர்களாயுள்ளனர். வேறு சிலரால் நன்றாகப் பேசவும் நன்றாக விளங்கிக்கொள்ளவும் முடிகிறது, ஆனால் படிக்கவும் எழுதவும் முடியவில்லை. முழுமையாகப் பார்க்கின்ற பொழுது, பெரும்பாலும் ஒவ்வொரு பிள்ளையும் வேறுபட்ட மொழி மற்றும் படிப்புத் தகைமைகள், வேறுபட்ட திறன் தரங்கள், வேண்டுகைகள், மற்றும் கற்றல் தேவைகள் உடையவர்கள் என்பதை உணர்த்தும். என்னுடைய முதற்பணி ஒவ்வொரு பிள்ளையின் தரத்தை உறுதிப்படுத்தி, எவ்வெப் பகுதிகளில் அவர்கள் முன்னேற்றப்படுத்தப்பட வேண்டும் என்பதை மதிப்பிடுவதாகும்.

இப் பின்புலத்தில், தனிநிலைப்பாடாக்குதல் மற்றும் சுதந்திரமான ஆசிரியக்கலைக் கோட்பாடுகள் மிக இன்றியமையாதன. வகுப்பினை "ஓரே தன்மையான குழு" ஆக நடத்தி, அவர்கள் முன் பாடப் பொருள்களை முன்வைத்தல் முழுவதும் முடியாததாகும். கற்பித்தலில் வேறுபாடும் தனிநிலைப்பாடும் இல்லாமல் இது நடைபெற மாட்டாது. நான் மாணவர்களின் சுதந்திரநிலையினை முன்னேற்றுவேன், இதனால் அவர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ கற்பது மாத்திரமின்றி சிக்கல்களைத் தீர்த்து அவர்தம் சொந்தத் திறன் மட்டங்கள் மற்றும் கற்பித்தல் தேவைகள் பற்றி எண்ணும் இயலுமையை மேம்படுத்துகின்றனர்.

மேலும் கற்பித்தலின் திறன் நோக்குநிலைப்படுத்துதல் என்பதும் மிகவும் இன்றியமையாத கோட்பாடாகும். என்னைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு பாடத்துக்கும் அல்லது தலைப்புத் தொடருக்கு முன்னே, மாணவர்கள் பெறவேண்டிய அல்லது மேலும் வளர்ச்சி செய்ய வேண்டிய செயல்சார், மொழிசார், தனிப்பட்ட மற்றும் சமூகம்சார் தகைமைகளையும் இத்தகைமை மேம்பாடு உண்மையில் எவ்வாறு நிகழ்ந்ததென நான் இறுதியில் உறுதி செய்தலையும் மிகவும் கண்காணிப்பாகக் கருத்தில் கொள்கிறேன்

எடுத்துக்காட்டு: கீழ்ப் பிரிவுக்கான கற்பித்தல் அலகொன்றினைத் (வகுப்புக் குழுவினுள்) திட்டமிடல்.
கருப்பொருள்: வெவ்வேறு சமயங்கள் ஒன்றாக வாழ்தல்.

1. அறிமுகம்: ஒரு தேவாலயத்துக்கு அல்லது பள்ளிவாசலுக்கு எப்போதாவது போயிருந்தால் அதைப்பற்றி சுருக்கமாகக் கூறும்படி நான் பிள்ளைகளைக் கேட்கிறேன். நாங்கள் இத் தலைப்பைப் பற்றி ஒன்றாகக் கலந்துரையாடவுள்ளோம் என அவர்களுக்கு நான் விளக்கப்படுவதோடு வகுப்பு முறை எவ்வாறு இருக்கப்போகின்றதென சுட்டிக் காட்டுகின்றேன்.

2. விரிவாக்கம்: தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் பற்றிய ஒரு விரிவான காணொளித் தொடரினை அரபிக் மொழியில் நாங்கள் ஒன்றாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். உள்வாங்கல் சிக்கல்களை தெளிவடையச் செய்த பின்பு, சிறுவர்களை இரண்டு குழுக்களாகப் பிரிக்கிறேன். படிக்கத் தெரிந்தவர்கள் அழிப்பதற்கும் சேர்ப்பதற்குமான தவறவிடப்பட்ட சொற்கள் உள்ளடங்கிய ஓர் உரையை பெறுகின்றனர். பணி முடிவடைந்த போது அவர்கள் என்னிடம் வருகின்றனர். அவர்கள் எவ்வாறு சிக்கலைத் தீர்த்தனர், எதனை நன்றாக அறிந்துகொண்டனர், எவ்வாறு அவர்கள் தம் திறன்மட்டத்தை முன்னேற்ற முடியுமென்பதை நான் கலந்துரையாடுகின்றேன். பின்பு அவர்கள் ஒரு தேவாலயம் அல்லது பள்ளிவாசலினது ஒரு படத்தை நிறந்தீட்டுவதற்காகப் பெறுகின்றனர். அதே நேரம் மற்றைய சிறுவர்கள் அரபிக் சொல்லினுடைய (பள்ளிவாசல்) மற்றும் (தேவாலயம்) முதல் எழுத்தை எழுதிப் பயிற்சி செய்கின்றனர். அவர்கள் பலகையில் உள்ள சொற்களில் இருந்து பார்த்தெழுதி பயிற்சி செய்கின்றனர். அவர்கள் செய்து முடித்த போது அவர்களது வேலையை என்னிடம் காட்டி பின்னூட்டலைப் பெற்றுக் கொள்கின்றனர். முடிவாக, அவர்களும் நிறந்தீட்டுதற்காக ஒரு படத்தைப் பெறுகின்றனர்.

3. காப்புக் கட்டம்: நிறந்தீட்டப்பட்ட தேவாலயங்கள் அல்லது பள்ளிவாசல்கள் ஊடாக கோபுரம் அல்லது பள்ளிவாசல் கம்பம், பாதிரியார் போன்ற குறிப்பிட்ட சொற்களை நான் சரிபார்க்கின்றேன்.

4. முடிவு: அரபாக இருக்கின்ற வகுப்பறையொன்று முஸ்லீமாக இருக்க வேண்டிய கட்டாயமில்லை, பல அரேபியர்கள் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள் எனவும் இருவருக்குமிடையிலான மதிப்புமிகு தொடர்பானது ஒற்றுமையான மனதுக்கு இசைவானதொரு வாழ்வுக்கு இன்றியமையாதது என்பதை ஒன்றாக நாம் சொல்லாடுகின்றோம்.

## 3. காசா றடேரினக்: மாணவர்கள் நோக்குநிலைக்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டு மற்றும் கற்றல் பயிற்றுநராக என் பங்கு

காசா றடேரினக் பொஸ்னியாவைச் சேர்ந்தவர். அவர் காள்ஸ்க்றோணா வில் (சுவீடன்) பல ஆண்டுகளாக அங்கு பொஸ்னியா / குறோசியன் / சேர்பியனுக்கான மொழி ஆசிரியராகக் கற்பித்துவருகிறார்.

மாணவர்கள் தாமாகவே முடிந்த அளவு செயற்பாடுடையவர் ஆகுதற்கு இடங்கொடுக்கவே எனது வகுப்பறையில், நான் மிகவும் கட்டுப்பாட்டுடன் இருப்பதைத் தவிர்ப்பதற்கு முயற்சிக்கின்றேன். இது "மரபு முறையான" பாடங்களுடன் கூட தொடர்புபட்டுள்ளது. நான் எனது கல்வி சார் பயிற்சியின்படி இவ்வாறான கற்பித்தலுக்குப் பழக்கப்பட்டிருக்கவில்லை. முடிந்தவரை இதுதான் ஒரே அணுகுமுறையாகும், ஏனெனில் சுவீடிஷ் பள்ளிகளிலுள்ள வழமையான வகுப்புகளில் இத்தகைய கற்பித்தலுக்கு மாணவர்கள் பழக்கப்பட்டுள்ளார்கள். நான் இவ்வாறான ஒரு கற்பித்தல் முறைக்கும் சுவீடனில் மாற்றமுற்ற ஆசிரியருக்கான பங்குக்கும் மேலும் சுவீடிஷ் ஆசிரியத் தோழர்களுடன் உரையாடலுக்கும் வகுப்பு வருகைகளுக்கும் பழக்கப்பட்டுக்கொண்டேன்.

### பாடத் தலைப்பு (இரட்டைப்பாடம்)

சிறுவர்கள் உரிமைகள்

### வகுப்புநிலை

2 ஆம் ஆண்டு தொடக்கம் 6 ஆம் ஆண்டு வரை (வயது கூடிய மாணவர்கள் வேறுபட்ட கருத்திட்டத்தில் ஈடுபடுவர்) 14 மாணவர்கள்.

### பின்புலமும் குறிக்கோள்களும்

ஒருவர் சுவீடன் போன்ற ஒரு நலன்புரி நாட்டில் அல்லது ஒரு வறிய நாட்டில் வாழ்ந்தாலும், சிறுவர்கள் உரிமைகள் மீறப்படுதல் நடைபெறலாம். பல வேளைகளில், யுனிசெப் சிறுவர் மாநாடு பற்றிய போதியளவு விழிப்புணர்வு இல்லை. ஒவ்வொரு பள்ளியும் சிறுவர்களுக்கு அவர்களின் உரிமை பற்றிக் கற்பிக்கும் பொறுப்புடையது, சுவீடனில் அது பள்ளிச் சட்டத்தால் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

பா.மொ.க ஆசிரியர் என்ற முறையில், மாணவர்களுக்கு அவர்களது தாய்மொழியிலும் இத்தகவலை வழங்குதலும் அத்துடன் அது தொடர்பான சிக்கல்கள் பற்றிக் கலந்துரையாடலும் இன்றியமையாததாகும்.

### கருவிகள்

- ஏறத்தாழ 20-30 வெவ்வேறு முக உணர்வுள்ள பிள்ளைகளின் படங்கள் (எ.டு. சஞ்சிகைகள் அல்லது இணையத் தளங்களில் இருந்து): மகிழ்ச்சி, துன்பம், ஆர்வமற்ற, முதலியன.
- ஐந்து பக்கங்களில் கலந்துரையாடலுக்கான கருத்துகள் "குறைந்தது 3 அட்டைகளுடன் உமது பாடங்களில் உள்ள பிள்ளைகளின் மனநிலையை விவரியுங்கள் பிள்ளைகள் ஏன் இப்படியாக அல்லது அப்படியாக உணர்கிறார்கள் என்பது பற்றி எண்ணுக, பிள்ளையின் உணர்வை விளங்கிக்கொள்ள துணைசெய்யக்கூடிய ஒரு சிறிய கதையைக் கண்டுபிடிக்குக".
- சிறுவர் உரிமை தொடர்பான மிக இன்றியமையாத தகவல்கள், எளிமையான பதிப்பின் பிரதிகள் (இணையத் தளத்தைப் பார்க்க)

### பாடத் தொடர்

1. நான் வகுப்புக்கு தலைப்புப் பற்றியும் பாடத்தின் இலக்குப் பற்றியும் சுருக்கமாக அறிவிக்கிறேன்.
2. நான் 20-30 வரையான படங்களைத் தரையில் வைக்கிறேன். ஒன்று அல்லது இரண்டு பிள்ளைகள் நான் அவ்வாறு செய்ய உதவுகின்றனர்.
3. பிள்ளைகள் இரு குழுக்களை அமைக்கின்றனர். ஒவ்வொரு குழுவும் 2-3 வரையான படங்களை தெரிவு செய்கிறது, அத்துடன் கலந்துரையாடலுக்கும் பணிக்குமான கருத்துகளைக் கொண்ட ஒரு பக்கத்தினைப் பெறுகின்றது, 10 மணித்துளிகளில் அவர்கள் கண்டுபிடித்தவற்றை வகுப்புக்கு அறிக்கையிடுதற்கு. (குழுக்களை அமைக்கும்போது, மொழி வலுவற்ற பிள்ளைகள் மொழி வலுவுள்ள பிள்ளையுடன் ஒன்றாக செயற்படுவதை நான் உறுதிப்படுத்துவேன்).
4. குழுக்களில் கிட்டத்தட்ட 10 மணித்துளிக் கலந்துரையாடலும் மற்றும் சிறுகுறிப்பு எடுத்தலும்.
5. நான் இரண்டு வட்டங்களை அமைக்கிறேன், ஒன்று 3 குழுவையும் மற்றும் ஒன்று 4 குழுவையும் கொண்டிருக்கும் (= 14 மாணவர்கள்). இரு வட்டங்களிலும், குழுக்கள் தங்களுடைய படங்களையும் கண்டு பிடிப்புகளையும் காட்டும். (எல்லாரும் எல்லாவற்றையும் கேட்கவேண்டியதில்லை, இதனால் இரண்டு வட்டங்கள்). நான் கேட்பவராகப் பின்னணியில் நிற்பேன்.
6. சிறுவர் ஒப்பந்தம் தொடர்பாக என்னிடமிருந்து ஒரு சிறு உள்ளீடு: இது என்ன? எப்பொழுதில் இருந்து இருக்கின்றது?, முதலியன.
7. ஒவ்வொரு பிள்ளையும் சிறுவர் உரிமைகள் (http : // unicef. Se/ barnkonventionen) உள்ள ஒரு பக்கத்தை பெறுகிறது. பிள்ளைகள் 3 பேர் கொண்ட குழுக்களாக 3 உரிமைகளைத் தெரிவு செய்கிறார்கள், அவற்றை அவர்கள் கலந்துரையாடி பின் மற்றவர்களுக்கு வழங்குவார்கள் (இவ் உரிமை எதனை ஒப்பந்தம் செய்கிறது, எத்தகைய உருப்படியான எடுத்துக்காட்டுகள் நினைவுக்கு வருகின்றன, முதலியன). குறைந்தது ஒரு தடவையாவது அனைத்து உரிமைகளும் கலந்துரையாடப்படுவதை நான் உறுதிப்படுத்துகிறேன்.
8. எடுத்துரைப்புகள் (முழு அவையில், முழு வகுப்பில்)
9. நான் புதிய App ஒன்றைப் பற்றி அவர்களுக்கு அறிவுறுத்துகிறேன் "Alla Barns Ratt" (அனைத்து சிறுவர் உரிமைகள்) அதனை வீட்டில் மீள்பார்வை செய்யும்படி பரிந்துரை செய்கிறேன். கண்ணோட்டம்: அடுத்த கிழமை, நாம் ஏனைய உரிமைகளைப் பற்றி கலந்துரையாடுவோம்..

II